முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1093

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.09.2022**, திங்கட்கிழமை

1. ஓங்கார சூட்சுமமே அரங்கா வாழ்க
   ஓங்கார தவசியே தேசிகா வாழ்க
   ஓங்காரக்குடில் படைத்த ஐயனே வாழ்க
   ஓங்காரம் உலகமெங்கும் பரவ சேவையாற்றுகின்ற குருராஜனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   தாழ்விலா சுபகிருது நங்கை திங்கள்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 09ம் நாள், 26.09.2022 திங்கட்கிழமை)
   தண்டாயுதன் யானும் அரங்கனுக்கு எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் தருகின்ற சொல்கின்ற சொல் செயல் அனைத்தும்
   உலகமெங்கும் வேதமாக பரவக்கூடும்
   மறைபோற்றும் அரங்கன் தர்மத்தால்தான்
   மண்ணுலகமே உயிர் பாதுகாப்புப்பெறும்
4. காப்புடன் உலகமெங்கும் சமாதானத்தை
   கருணைகொண்டு அரங்கன் சன்மார்க்க வழியாக உருவாக்கி வர
   தர்மத்தோடு அரங்கன் சன்மார்க்கத்தை
   தலைவணங்கி ஏற்கும் தேசமெல்லாம் பாதுகாப்பை பெறும்
5. பாதுகாப்பை பெறுவதோடு கண்ணியமிக்க
   பழுதில்லா ஞானத் தலைமைகளை பெற்று
   பூதலமெங்கும் சிறந்த தேசமாகவும் ஆளுமையாகவும்
   புண்ணியபலம் பெற்று சிறக்க நேரும்
6. நேர்மை கொண்ட அரங்கன் கொள்கைகள் அனைத்தும்
   நிலவுலகை ஆளுவது உறுதிஉறுதி
   பெருமைமிக்க அரங்கன் தர்மத்தால்தான்
   பேருலகமே வறுமை இன்றி வாழ்வதும் உறுதிஉறுதி
7. உறுதிகொண்டு அரங்கன் அவதாரத்தையும்
   உறுதிகொண்டு ஆறுமுகன் என் வழிபாட்டையும்
   கருதிகருதி உலகமெல்லாம் ஏற்று
   கருணைகொண்டு உலகத்தலைவர்கள் வணங்கி சன்மார்க்கம் பயில
8. பயிலவே உலகம் பழுதில்லாத சமத்துவ சமாதான
   பரோபகாரமிக்க ஞான பூமியாக மாறி
   பேருலகமெல்லாம் ஆறுமுகன் என் தலைமையில்
   பிசகின்றி ஞான ஆட்சி அடையக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–